# அழகப்பா பல்கலைக்கழகம்

(தேசிய தர நிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்று மதிப்பீட்டில் யூ (ஊபீயு:3.64) தகுதி பெற்றது)

**காரைக்குடி – 630 003**

நாள்:29.8.2018

அழகப்பா பல்கலைக்கழக மாணவர்களின் படைப்பாக்கத்திறனை மேம்படுத்துவதற்காக தமிழ்ப்பண்பாட்டு மையம் ஏற்பாடு செய்த பயிற்சிப்பட்டறை 28.08.2018-அன்று பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாக் கருத்தரங்க அறையில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு தமிழ்ப்பண்பாட்டு மைய இயக்குநர் பேரா.சே.செந்தமிழ்ப்பாவை அவர்கள் வரவேற்புரையாற்றினார்.




அழகப்பா பல்கலைக்கழக துணைவேந்தர் பேரா.நா.இராஜேந்திரன் அவர்கள் இந்நிகழ்ச்சிக்கு தலைமையேற்று உரையாற்றுகையில், சிறியவிதை பெரும்விருட்சமாக வளர்வது போல மாணவர்களுக்குள் இருக்கும் உணர்வுகளை படைப்புகளாக வெளிப்படுத்த வேண்டும். எதைச் செய்தாலும் முழுஈடுபாட்டுடன் அதைசெய்ய வேண்டும். அப்படிச் செய்தால் மாணவர்கள் சமூகத்தில் வெற்றியாளராக வரமுடியும். எனவே மாணவர்களது படைப்புத் திறனை வெளிக்கொணர்வதற்கு இப்பயிற்சிப்பட்டறை ஒரு தூண்டுகோலாக அமையும் என தெரிவித்தார்.

இப்பயிற்சிப்பட்டறையில் பல்வேறு துறைகளைச் சார்ந்த 240 மாணவர்களுக்கு புதுக்கவிதை மற்றும் சிறுகதை புனைவது பற்றி பேரா.சே.செந்தமிழ்ப்பாவை அவர்களும், கட்டுரை எழுதும் முறைமை குறித்து பேரா.சு.இராசாராம் அவர்களும், மேடைப்பேச்சுக் கலை குறித்து பேரா.மா.சிதம்பரம் அவர்களும் பயிற்சியளித்தனர். இதனையடுத்து மாணவர்களுடன் கலந்துரையாடல் நடைபெற்றது.

நிகழ்ச்சி முடிவில் உதவிப் பேராசிரியர் முனைவர் கா.கணநாதன் நன்றி கூறினார்.

பேரா.ஹா.குருமல்லேஷ் பிரபு
பதிவாளர்.